2001 மே 28] [பேரவைத் தலைவர்]

அவர்களது மறைவினால், அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும், இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன். மறைந்த இப்பெரியவர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று ஒரு நிமிடம் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று ஒரு மணித்துளி அமைதி காத்தனர்.)

2. இரங்கல் தீர்மானங்கள்

(அ) திரு. சாதிக் அலி, முன்னாள் தமிழக ஆளுநர்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *முதலில் திரு. சாதிக் அலி, முன்னாள் தமிழக ஆளுநர் அவர்கள் மறைவு குறித்து. முதுபெரும் காந்தியவாதியும், இந்திய நாட்டின் விடுதலைக்காக பல்வேறு போராட்டங்களில் கலந்துகொண்டு பலமுறை சிறை சென்றவரும், எழுத்தாற்றல் மிக்கவரும், மக்களவை, மாநிலங்களவை உறுப்பினராகவும், மஹாராஷ்டிர மாநிலத்தின் ஆளுநராகவும், 4-11-1980 முதல் 2-9-1982 வரை இம்மாநில ஆளுநராகவும், பணியாற்றிய திரு. சாதிக் அலி அவர்கள் 17-4-2001 அன்று மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை பெரும் அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது. அவரது மறைவினால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு இப்பேரவை ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.*

முற்பகல் 10-05

(ஆ) திரு. பா. ராமச்சந்திரன், முன்னாள் மத்திய மின் துறை அமைச்சர் மற்றும் முன்னாள் கேரள மாநில ஆளுநர்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அடுத்து திரு. பா. ராமச்சந்திரன், சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர், முன்னாள் மத்திய மின் துறை அமைச்சர் மற்றும் முன்னாள் கேரள மாநில ஆளுநர் அவர்கள் மறைவு குறித்து.*